சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:64/2019

2023 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் உமாதேவி (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

4 <u>வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

29.09.2023

1) விபத்தை பற்றி எனக்கு நேடியாக தெரியாது. என் கணவரின் வயதை நிருபணம் செய்ய பிரேத பரிசோதனை அறிக்கையை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் வருமானம் பற்றி என் மனுவில் கூறியுள்ளதும் பல நிலங்களை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்ததாக சொல்லுவது உண்மை அல்ல என்றால் சரியல்ல. எனது கணவரின் வருமானத்தை காட்ட ஆ வணங்கள் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் மருத்துவசெலவுகள் சம்மந்தமாக சிகிச்சை அளித்த மருத்துவர் தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவசெலவுகள் சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் கூடுதல் இழப்பீடு பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

அவற்றை ஒரு சாட்சியமாக ஏற்றுகொள்ள முடியாது என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எனக்கு இழப்பீடு ஏதுவும் கொடுக்க வேண்டும் என்றால் 1வது எதிர்மனுதாரர் தான் கொடுக்ககடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 3வது எதிர்மனுதாரர் வாகனத்தின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஆதனால் 4வது எதிர்மனுதாரர் இழபீடு கொடுக்ககடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகபடியானது என்றும் அது எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 4வது எதிர்மனுதாரர் பொறுத்து மனுதள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.